# January 26, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பயங்கரவாத தடுப்பு மற்றும் வன்முறை தொடர்பான குற்றங்களை தடுக்க அமெரிக்காவின் எஃப்பிஐ மாதிரியில் தேசிய காவல் பணிகள் (என்பிஎஸ்) என்ற புதிய அமைப்பை ஏற்படுத்த திட்ட மிட்டுள்ளதாக பிரிட்டன் உள் துறை அமைச்சர் ஷாபனா மஹ்மூத் தெரிவித்தார்.

(i) இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பங்களுடன் நவீன காலகுற்றங்களை தடுக்கும்நோக்கில் நன்கு பயிற்சிபெற்ற திறமையான அதிகாரிகளைக் கொண்டு என்பிஎஸ் (பிரிட்டன் எஃப்பிஐ) ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த அமைப்பின் கீழ் தேசிய அளவிலான குற்ற முகமைகள் ஒரே குடையின்கீழ் கொண்டுவரப்படவுள்ளது' என்றார்.

2. மியான்மர் பொதுத் தேர்தலின் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப் பதிவு நடைபெற்றது.

(i) 2021-இல் மக்களால் தேர்ந்தடுக்கப்பட்ட ஆங் சான் குலயின் (80) அரசை கவிழ்த்து ராணுவம் ஆட்சி புரிந்துவரும் நிலையில், தேர்தல் வாயிலாக அதிகாரபூர்வமாக அதிபர் பொறுப்பை ஏற்க ராணுவ ஜெனரல் மின் ஆங்லயிங் தீவிரம் காட்டி வருவதாக அந்நாட்டு அரசியல் நிபுணர்கள் தெரிவித்தனர்.

(ii) 5 ஆண்டுகளுக்குப் பிறகு 330 நகர்ப் பகுதிகளுக்கு நடைபெற்ற இத்தேர்தலில் ராணுவத்துக்கு எதிரான கிளர்ச்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள 67 நகர்ப்பகுதிகள் பங்கேற்கவில்லை.

(iii) இதனால் மியான்மர் நாடாளுமன்றத்தில் (கீழவை மற்றும் மேலவை) மொத்தமுள்ள 664 தொகுதிகளுக்கு 586 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. இதில் 25 சதவீதம் ராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) ஏற்கெனவே நடைபெற்ற இரு கட்ட வாக்குப்பதிவில் ராணுவத்தின் ஆதரவு பெற்ற 'யூனியன் சாலிடாரிட்டி அண்ட் டெவலப்மெண்ட் கட்சி' (யுஎஸ்டிபி) பெரு வாரியான தொகுதிகளில் வெற்றி பெற்றதாகக்கூறப்படுகிறது. ராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 25 சதவீத தொகுதிகளையும் சேர்த்து ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையுடன் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர், புதிய அதிபராக ராணுவ ஜெனரல் மின் ஆங்லயிங் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. 24 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 4-ஆவது சுற்றுக்கு முன்னேறியிருந்தார். அதில் அவரை சந்திக்கவிருந்த செக் குடியரசின் ஜேக்கப் மென்சிக் காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகியதால், ஜோகோவிச் தற்போது காலிறுதிக்கு முன்னேறியதாக அறிவிக்கப்பட்டார்.

(i) இதன் மூலமாக, ஆஸ்திரேலிய ஓபனில் அதிக முறை (16) காலிறுதிக்கு முன்னேறியவராக ஜோகோவிச் சாதனை படைத்தார். முன்னதாக சுவிட்ஸர்லாந்து நட்சத்திரம் ரோஜர் ஃபெடரர் (15 முறை) வசம் அந்த சாதனை இருந்தது. 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலுமாக அதிக முறை (64) காலிறுதிக்கு முன்னேறியவராக ஜோகோவிச் தொடர்கிறார்.

4. இந்திய டென்னிஸ் ஜாம்பவான் விஜய் அமிர்தராஜுக்கு பத்ம பூஷண் விருதும், உலகக் கோப்பை வென்ற கிரிக்கெட் கேப்டன் இந்தியகள் ரோஹித் சர்மா, ஹர்மன்பிரீத் கௌர் ஆகியோருக்கு பத்ம விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்தது. அதில், விளையாட்டுத் துறையைச் சேர்ந்த 9 பேர் விருதுகளுக்குத் தேர்வாகியுள்ளனர்.

(i) நாட்டின் 3-ஆவது உயரிய குடிமக்கள் விருதாக இருக்கும் பத்ம பூஷண் விருதுக்கு, விஜய் அமிர்தராஜ் (டென்னிஸ்) தேர்வாகியிருக்கிறார்.

(ii) ரோஹித் சர்மா, ஹர்மன்பிரீத் கௌர் (கிரிக்கெட்), சவிதா புனியா (ஹாக்கி), பிரவீண் குமார் (பாரா தடகளம்), புதுச்சேரியை சேர்ந்த பழனிவேல் (சிலம்பம்), பகவன்தாஸ் ராய்க்வர் (பாரம்பரிய தற்காப்புக் கலை), பல்தேவ் சிங் (ஹாக்கி), ஜார்ஜியாவை சேர்ந்த விளாதிமீர் மெஸ்த்விரிஷ்விலி (மல்யுத்தம்) ஆகியோருக்கு பத்ம ஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

(iii) பத்மபூஷண் பெறும் டேவிஸ் கோப்பை டென்னிஸ் நட்சத்திரமான விஜய் அமிர்தராஜ், அமெச்சூர் மற்றும் ஓபன் எராவின் தொடக்ககால கட்டத்தில் சிறந்த இந்திய டென்னிஸ் வீரராக மிளிர்ந்தார்.

(iv) பத்மஸ்ரீ பெறும் ரோஹித் சர்மா டி20 உலகக் கோப்பையையும், ஹர்மன்பிரீத் கௌர் ஒருநாள் உலகக் கோப்பையையும் இந்திய அணிகளுக்காக வென்று தந்துள்ளனர்.

(v) பாராலிம்பிக்கில் தங்கம் வென்றதர்காக பிரவீண் குமாருக்கும், ஒலிம்பிக் பதக்க மல்யுத்த வீரர்களை தயார் செய்ததற்காக விளாதிமீர் மெஸ்த்விரிஷ்விலிக்கும் (மறைவுக்குப் பிறகு) பத்ம ஸ்ரீ விருது வழங்கப்படுகிறது. மகளிர் ஹாக்கியின் சிறந்த கோல்கீப்பராக இருக்கும் சவிதாபுனியாவும் பத்ம ஸ்ரீ விருது பட்டியலில் உள்ளார்.

5. உலகின் நம்பர் 1 வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலென்கா கனடாவின் இளம் வீராங்கனை விக்டோரியா போகோவை வெளியேற்றினார். இத்துடன், கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் தொடர்ந்து அதிக ஆட்டங்களில் (20) டைபிரேக்கரில் வென்றவராக சபலென்கா சாதனை படைத்தார். முன்னதாக ஜோகோவிச் அடுத்தடுத்து 19 ஆட்டங்களில் டைபிரேக்கர் வெற்றிகளைப் பதிவு செய்ததே சாதனையாக இருந்த நிலையில், தற்போது சபலென்கா அதை முறியடித்தார்.

6. இந்திய காவல் பணி (ஐபிஎஸ்) உயரதிகாரியும் கூடுதல் டிஜிபி அந்தஸ்தில் உள்ளவருமான சாயா சர்மாவுக்கு குடியரசுத் தலைவர் காவல் பதக்கத்தை மத்திய உள்துறை அறிவித்தது.

(i) இந்திய காவல் அமைப்புகளில் பணியாற்றுவோரின் பன்முகத் திறன்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாக காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை செயல்படுகிறது. இதன் இயக்குநராக சாயா சர்மா தற்போது பணியாற்றி வருகிறார்.

(ii) தில்லி காவல் துறையில் பணியாற்றியபோது, பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்புடைய விவகாரங்களில் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட ஒரு வலுவான அணுகுமுறையை வகுத்தது, 2012-இல் நாட்டையே உலுக்கிய நிர்பயா

கூட்டுப்பாலியல் வழக்கு புலனாய்வை வழிநடத்தியது, நுணுக்கமான மற்றும் அறிவியல்பூர்வ அணுகுமுறையுடன் விசாரணை மேற்கொள்வது, பல்வேறு குழந்தைகள் கடத்தல் வழக்குகளின் புலனாய்வை வழிநடத்தி ஏராளமான குழந்தைகளை கண்டுபிடித்தது மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைய விசாரணைப்பிரிவு தலைமை அதிகாரியாக இவர் ஆற்றிய பணிகளுக்காக தில்லி உயர்நீதிமன்றத்தால் சாயா சர்மா பாராட்டப்பட்டுள்ளார்.

(iii) இத்துடன், சிறார் போதைப் பொருள் கடத்தல் மற்றும் தவறான பயன்பாட்டை தடுக்கும் விதமாக இவர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக ஐ.நா.போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தின் நற்சான்றையும் பெற்றுள்ளார். இவரது காவல் பணியில் துப்பு துலக்கப்பட்ட வழக்குகளை மையமாகக் கொண்டு பல்வேறு 'கிரைம் வெப் சீரிஸ்கள்' ஓடிடி தளங்களில் வெளியாகியுள்ளன.

(iv) 1999-ஆம் ஆண்டு ஏஜிஎம்யுடி எனப்படும் அருணாசல பிரதேசம், கோவா, மிஸோரம் யூனியன் பிரதேசங்கள் பிரிவைச் சேர்ந்த இவர், காவல்துறையில் வடகிழக்கு மாநிலங்களில் ஆற்றிய பணிக்காக ஏற்கெனவே இரண்டு சிறப்புப் பணிப் பதக்கங்கள், குடியரசுத் தலைவர் காவல் பதக்கம், சர்வதேச தலைமைத்துவ அமைப்பின் தலைமைத்துவம் மற்றும் துணிச்சலுக்கான விருது, சிறந்த புலனாய்வுத்திறனுக்கான மத்திய உள்துறை அமைச்சரின் பதக்கம் போன்றவற்றை பெற்றுள்ளார்.

7. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை (ஜன. 27) இறுதியாகவுள்ளது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு அன்றைய தினம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(i) இந்த ஒப்பந்தப் பேச்சுவார்த்தை கடந்த 2007-இல் தொடங்கப்பட்ட நிலையில், 18 ஆண்டுகளுக்குப் பின் பேச்சுவார்த்தையின் வெற்றிகரமான நிறைவும் முறைப்படி அறிவிக்கப்பட உள்ளது.

(ii) இந்தியா இதுவரை மேற்கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களுக்கெல்லாம் 'தாயாக' இந்த ஒப்பந்தம் இருக்கும் என்று வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் வர்ணித்துள்ளார்.

(iii) கடந்த 2014-ஆம் ஆண்டில் இருந்து ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஓமன், நியூஸிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பு, மோரீஷஸ் ஆகிய நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதற்கு முந்தைய காலங்களில் ஆசியான் (10 நாடுகள்), ஜப்பான், தென் கொரியா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுடன் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(iv) இந்நிலையில், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி, ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, பின்லாந்து, ஹங்கேரி, அயர்லாந்து, நெதர்லாந்து, போர்ச்சுகல், போலந்து, டென்மார்க், ஸ்வீடன் உள்ளிட்ட 27 நாடுகளை உள்ளடக்கிய முக்கிய கூட்டமைப்பான ஐரோப்பிய யூனியனுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதியாகவுள்ளது.

(v) தில்லியில் திங்கள்கிழமை (ஜன.26) நடைபெறும் குடியரசு தின விழாவில்

தலைமை விருந்தினர்களாக பங்கேற்க ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான்டெர் லெயன் ஆகியோர் இந்தியா வந்துள்ளனர்.

(vi) தில்லியில் நடைபெறும் இந்திய-ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டில் அவர்கள் பங்கேற்கவுள்ளனர். அப்போது, மேற்கண்ட அறிவிப்புகள் வெளியிடப்படவுள்ளது.

(vii) எப்போது கையொப்பம்?

இந்தியாவைப் பொருத்தவரை, இந்த ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் போதுமானது. ஆனால், ஐரோப்பிய யூனியன் தரப்பில் அதன் நாடாளுமன்ற ஒப்புதல் தேவை என்பதால் அமலாக்கம் சற்று காலமெடுக்கும் எனத் தெரிகிறது.

(viii) ஐரோப்பிய யூனியன், இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாகத் திகழ்கிறது. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 17 சதவீதம் இந்த நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகிறது. கடந்த 2024-25- இல் இருதரப்பு சரக்கு வர்த்தக மதிப்பு 135.53 பில்லியன் டாலராகும். சேவை வர்த்தகத்தின் மதிப்பு 83.10 பில்லியன் டாலர்.

(ix) 45 கோடிக்கும் அதிக மக்கள்தொகை கொண்ட ஐரோப்பிய யூனியன் மொத்த உற்பத்தி மதிப்பு 20 ட்ரில்லியன் டாலராகும். இந்தியாவின் மக்கள்தொகையையும் கணக்கிட்டால், மொத்தம் 200 கோடி பேருடன் மாபெரும் சந்தையை இந்த ஒப்பந்தம் உருவாக்கும்.

(x) ஜவுளி, காலணி உள்பட சுமார் 90 சதவீத பொருள்களுக்கு வரி விலக்கு அல்லது வரி குறைப்புக்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

8.கடலோர மாவட்டங்களில் கடல் ஆமைகளை பாதுகாக்க மீனவர்களுக்கு ரூ.6.40 கோடியில் சாதனங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

(i) தமிழ் நாட்டின் கடலோர மாவட்டங்களில் இனப்பெருக்கத்துக்காக கடற்கரைக்கு வரும் கடல் ஆமைகளை மீன்பிடி இழுவ லைகளிலிருந்து பாதுகாக்க மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மூலம் மீனவர்களுக்கு ரூ.6.40 கோடியில் ஆமை விலக்கு சாதனங்களை விலையில்லாமல் வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்க காலமான ஜன.1 முதல் ஏப்.30 வரை வழங்கப்படுகிறது.

(ii) அவற்றுள் முக்கியமாக கடற்கரையிலிருந்து 5 கடல் மைல்களுக்குள் மீன்பிடிவிசைப்படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடுவதையும், கடல் ஆமைகள் முட்டையிடும் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட இடங்களில் 10 குதிரைத் திறனுக்கும் அதிகமான திறன் கொண்ட இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடிப் படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடுவதையும் மற்றும் திருக்கை மீன் வலைகள் பயன்படுத்துவதையும் தடைசெய்யதுள்ளது.

(iii) அதன்படி, முதல்கட்டமாக 50 மீன்பிடி விசைப்படகுகளுக்கு ரூ.11.75 லட்சத்தில் சோதனை அடிப்படையிலும், அதனைத்தொடர்ந்து 2,613 படகுகளுக்கு ரூ.6.29 கோடியிலும் ஆமை விலக்கு சாதனங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது இழுவலைகளில் இச்சாதனங்களை பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

(iv) மீனவர்களுக்கு விலையில்லாமல் வழங்கப்படும் இச்சாதனங்களின் மூலம் மீன்பிடி இழுவலைகளில் கடல் ஆமைகள் ஆமைகள் சிக்காமல் வெளிச்செல்வதுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற முதல் இந்திய விண்வெளி வீரரான சுபான்ஷு சுக்லாவுக்கு அசோக சக்ராவிருது அறிவிக்கப்பட்டுள்ளது.

(i) இந்திய விமானப்படை விமானியான சுக்லா, கடந்த 2025-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்க நிறுவனத்தின் விண்கலம் மூலம் விண்வெளிக்குச் சென்றார். மேலும், சர்வதேச விண்வெளி நிலையத்திலும் 18 நாள்கள் தங்கியிருந்தார்.

(ii) இதன்மூலம் ராகேஷ் சர்மாவுக்குப் பிறகு விண்வெளிக்குச் சென்ற 2-ஆவது இந்திய விண்வெளி வீரர், சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற முதல் இந்திய விண்வெளி வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

10. பிரதமரின் அலுவலகம் (PMO) அதன் நீண்டகால இருப்பிடமான சவுத் பிளாக்கில் இருந்து, "சேவா தீர்த்தம்" (சேவைக்கான இடம்) என்று பெயரிடப்பட்ட புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது, இந்தியாவின் நிர்வாக வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது. இந்த இடமாற்றம் வெறும் முகவரி மாற்றம் மட்டுமல்லாமல், நிர்வாகத்தில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகவும் சித்தரிக்கப்படுகிறது.

(i) வரலாற்று முக்கியத்துவம் மற்றும் பாரம்பரியம் - வரலாற்றுக்கு ஒரு சாட்சி: 1947 முதல், பிரதமரின் அலுவலகம் சவுத் பிளாக்கில் இருந்து செயல்பட்டு வருகிறது. ஜவஹர்லால் நேரு முதல் நரேந்திர மோடி வரை 15 பிரதமர்களுக்கு இது பணிபுரியும் இடமாக இருந்துள்ளது.

(ii) "போர் அறை" - சவுத் பிளாக் என்பது தேசத்தின் தலைவிதி தீர்மானிக்கப்பட்ட "அதிகார மையம்" ஆகும். குறிப்பாக, 1971 இந்தியா-பாகிஸ்தான் போரின் போது இது ஒரு முக்கியமான "போர் அறையாக" செயல்பட்டது. அங்கு பிரதமர் இந்திரா காந்தி இராணுவ மற்றும் இராஜதந்திரத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டார்.

(iii) முறையான பெயரிடல் - இது பல தசாப்தங்களாக தலைவரின் செயலகமாக செயல்பட்டாலும், மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா கட்சி அரசாங்கத்தின் போது 1977-ல் இது அதிகாரப்பூர்வமாக "பிரதமரின் அலுவலகம்" என்று பெயரிடப்பட்டது.

(iv) "சேவா தீர்த்தம்" - ஒரு புதிய கட்டிடக்கலைத் தத்துவம் ₹1,189 கோடி மதிப்பிலான சென்ட்ரல் விஸ்டா திட்டத்தின் ஒரு பகுதியான புதிய கட்டிடத்திற்கு மாறுவது, குறியீட்டு மற்றும் செயல்பாட்டு ரீதியாக ஒரு திட்டமிட்ட மாற்றத்தைக் குறிக்கிறது:

(v) காலனித்துவத்திலிருந்து நவீனத்திற்கு - பழைய கட்டிடங்கள் 1931-ல் பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் சர் ஹெர்பர்ட் பேக்கரால் வடிவமைக்கப்பட்டன; புதிய "சேவா தீர்த்தம்" பத்மஸ்ரீ விருது பெற்ற பிமல் படேலால் வடிவமைக்கப்பட்டது. இந்த மாற்றம், காலனித்துவ காலத்தின் "அடிமை மனப்பான்மையிலிருந்து" விலகிச் செல்வதற்கான ஒரு முயற்சியாக விவரிக்கப்படுகிறது.

(vi) வெளிப்படைத்தன்மை Vs இரகசியம் - இந்த இரண்டு கட்டிடங்களின் கட்டிடக்கலை பாணிகளை ஆதாரங்கள் ஒப்பிடுகின்றன. சவுத் பிளாக் பெரும்பாலும் ஒரு "இரும்புத் திரை" போல - ஒளிபுகாத மற்றும் இரகசியமானதாக - கருதப்பட்டாலும், புதிய கட்டிடம் ஒரு "திறந்தவெளி வடிவமைப்பு" கொண்டுள்ளது. இது நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை அடையாளப்படுத்துவதையும், சிறந்த தொடர்பு மற்றும் கருத்துப் பரிமாற்றத்தை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

(vii) உலகளாவிய நிலை - பிரதமரின் அலுவலகம், கிரெம்ளின், வெள்ளை மாளிகை மற்றும் வெஸ்ட்மின்ஸ்டர் போன்ற உலகின் புகழ்பெற்ற இறையாண்மை மையங்களுடன் ஒப்பிடப்படுகிறது, இது தேசிய அதிகாரத்தின் சமமான சின்னமாக விளங்குகிறது. எதிர்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வை

(viii) இந்தியா தனது சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை நோக்கிப் பயணிக்கும் வேளையில், "சேவா தீர்த்தம்" என்பது ஒரு வலிமையான நிர்வாக மையமாக இருப்பதையும் தாண்டி, இன்னும் பலவற்றை பிரதிபலிக்க வேண்டும். இது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, தன்னம்பிக்கை மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் சம வாய்ப்புகளை வளர்க்கும் ஒரு இடமாக உருவகம் செய்யப்பட்டுள்ளது.

11. இந்திய சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் நிலை.

பெண்கள் விண்வெளி ஆராய்ச்சியைப் போலவே முன்னேறிய துறைகளில் முன்னேறி வரும் அதே வேளையில், அவர்கள் ஆழமான வேரூன்றிய பல சவால்களை ஒரே நேரத்தில் எதிர்கொள்கின்றனர்.

(i) பாதுகாப்பு மற்றும் வன்முறை

அதிகரித்து வரும் குற்றங்கள் - தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வருவதாகவும், பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தோராயமாக 30% மைனர் சிறுமிகளுக்கு எதிராக நிகழ்த்தப்படுவதாகவும் குறிப்பிடுகிறது.

தெரிந்த நபர்களால் துஷ்பிரயோகம் - ஆபத்தான வகையில், 90% க்கும் அதிகமான பாலியல் துன்புறுத்தல் வழக்குகள் பாதிக்கப்பட்டவருக்குத் தெரிந்த உறவினர்கள் அல்லது அண்டை வீட்டாரால் நடத்தப்படுகின்றன.

டிஜிட்டல் பாதிப்பு - டிஜிட்டல் யுகம் இணையத் துன்புறுத்தல் மற்றும் சமூக ஊடகங்களில் தனிப்பட்ட புகைப்படங்களை தவறாகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட புதிய அச்சுறுத்தல்களை அறிமுகப்படுத்தியுள்ளது, இது இளம் பெண்களின் மன ஆரோக்கியத்தை கடுமையாக பாதிக்கிறது மற்றும் பெரும்பாலும் சமூக தனிமைப்படுத்தலுக்கு வழிவகுக்கிறது.

(ii) கல்வி மற்றும் சமூக-பொருளாதார தடைகள்

கிராமப்புற-நகர்ப்புற வேறுபாடு - நகர்ப்புற மையங்களில் கல்வி முன்னேற்றம் காணக்கூடியதாக இருந்தாலும், கிராமப்புறங்களில் உள்ள பல பெண்களுக்கு உயர்கல்வி என்பது தொலைதூரக் கனவாகவே உள்ளது.

உயர் இடைநிற்றல் விகிதங்கள் - UNICEF இன் படி, உயர்நிலைப் பள்ளி அளவில் பெண்களிடையே இடைநிற்றல் விகிதம் கணிசமாக அதிகரிக்கிறது. முக்கிய காரணிகள் அடங்கும்:

◦ முறையான சுகாதாரம் மற்றும் கழிப்பறை வசதிகள் இல்லாமை, குறிப்பாக மாதவிடாய் காலத்தில் முக்கியமானவை.

◦ பள்ளிகளுக்கு செல்லும் நீண்ட தூர பயணம் தொடர்பான பாதுகாப்பு அச்சம்.

◦ வீட்டு வேலையின் சுமை மற்றும் பெற்றோர் வேலையில் இருக்கும் போது இளைய உடன்பிறந்தவர்களை பராமரிக்கும் பொறுப்பு.

(iii) உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து

• ஊட்டச்சத்தில் பாலினச் சார்பு: பல வீடுகளில் உள்ள ஆண் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் வழங்கப்படும் உணவின் தரத்தில் ஏற்றத்தாழ்வு உள்ளது, இது பரவலான உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது.

• இரத்த சோகை நெருக்கடி: இந்தியாவில் 57% க்கும் அதிகமான இளம்பெண்கள் இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவதாக தேசிய குடும்ப சுகாதார ஆய்வு தெரிவிக்கிறது.

(iv) முன்னேற்றத்திற்கான முன்மொழியப்பட்ட தீர்வுகள் -

• உள்கட்டமைப்பு: பள்ளிகள் இடைநிற்றலைத் தடுக்க முன்னுரிமை அடிப்படையில் தனிப்பட்ட கழிப்பறைகள் மற்றும் சானிட்டரி நாப்கின் விற்பனை இயந்திரங்கள் மற்றும் எரியூட்டிகளை நிறுவ வேண்டும்.

• தற்காப்பு: உடல் வலிமை மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க பள்ளி பாடத்திட்டத்தில் கட்டாய தற்காப்பு பயிற்சி ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

• ஆதரவு அமைப்புகள்: பெண்கள் பாலியல் அச்சுறுத்தல்கள் மற்றும் சமூக ஊடக அழுத்தங்களுக்கு வழிசெலுத்த உதவுவதற்கு ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பிரத்யேக உளவியல் ஆலோசகர் இருக்க வேண்டும்.

• உணர்திறன்: சிறு வயதிலிருந்தே பெண்களின் உரிமைகள் மற்றும் அடையாளத்தை மதிக்க ஆண்களுக்கு கற்பிப்பதன் மூலம் பாலின சமத்துவம் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும்.

• அணுகல்: தொலைதூர கிராமங்களில் இருந்து பயணிக்கும் சிறுமிகளுக்கு சைக்கிள்கள் அல்லது பிரத்யேக பள்ளி பேருந்துகள் வழங்கும் திட்டங்களை அரசாங்கங்கள் விரிவுபடுத்த வேண்டும்.

ஒரு பையனுக்கு கல்வி கற்பது ஒரு தனிநபருக்கு கல்வியை அளிக்கும் அதே வேளையில், ஒரு பெண்ணுக்கு கல்வி கற்பது முழு தலைமுறைக்கும் கல்வி அளிக்கிறது.

இது கவிஞர் பாரதியாரின் பார்வையைத் தூண்டுகிறது.

“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்”

சமூகத்திற்கு "வானத்தை பரிசாக" கொடுக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் "சிறகுகளை வெட்டுவதை" வெறுமனே நிறுத்துங்கள், அதனால் அவர்கள் சொந்தமாக பறக்கலாம்